# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள தாருல் அமான்
## பள்ளிவாயிலில் 27.04.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அதிகாரம் அல் பக்கராவின் 128, 129 & 130 வசனங்களை ஓதினார்கள்:**

அதன் பொருள்: *இப்ராஹீமும், இஸ்மாயீலும் அந்த குறிப்பான வீட்டின் அடித்தளங்களை உயர்த்திய போது (அவ்விருவரும்) எங்களுடைய இறைவா! எங்களிடமிருந்து (இப்பணியை) ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீயே நன்கு கேட்கக் கூடியவனும், நிரந்தரமாக அறியக்கூடியவனுமாவாய் என்று துஆ செய்தனர்.*

*எங்களுடைய இறைவா! எங்கள் இருவரையும் உனக்கு கட்டுப்படக்கூடிய அடியார்களாக விளங்கச் செய்வாயாக! எங்களுடைய வழித்தோன்றல்களிலிருந்தும் உனக்கு கட்டுப்படக்கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்குவாயாக! எங்களுக்கு ஏற்ற வணக்க வழிமுறைகளையும் தியாகத்திற்கான வழிமுறைகளையும் எங்களுக்கு கற்றுத் தருவாயாக! எங்களது தவ்பாவை ஏற்றுக் கொண்டவாறு எங்களிடத்து உனது அருளுடன் கவனம் செலுத்துவாயாக! நிச்சயமாக நீயே தவ்பாவை ஏற்றுக் கொண்டவாறு எங்களிடத்து உனது அருளுடன் கவனம் செலுத்துவாயாக! நிச்சயமாக நீயே தவ்பாவை ஏற்றுக் கொள்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டக்கூடியவனுமாவாய்.*

*எங்களுடைய இறைவா! அவர்களுக்கு உனது வசனங்களை ஓதிக் காட்டி அவர்களுக்கு வேதத்தையும் அதன் ஞானத்தையும் கற்றுக் கொடுத்து அவர்களை தூய்மைப்படுத்தும் ஒரு மகத்தான தூதரை அவர்களிலிருந்தே அவர்களிடம் தோற்றுவிப்பாயாக! நிச்சயமாக நீயே முழுமையான வல்லமையுடையவனும், ஞானமிக்கோனும் ஆவான். (2:128-130)*

இந்த வசனங்களில் அந்த மகத்தான முன்மாதிரியும் துஆவும் கூறப்பட்டுள்ளது. அதில் பணிவும், தாழ்மையும், தியாகமும், ஆழ்ந்த பற்றும், தனது சந்ததிகள் இறைவனோடு ஒன்றியிருக்க வேண்டும் என்ற கவலையும் அதற்கான துஆவும், உலகத்திற்கு நேர்வழியும் சிறந்த வழிகாட்டல் கிடைப்பதற்கும், ரஹ்மானின் அடியாராக ஆகுவதற்கான கவலை மற்றும் துஆ ஆகியவற்றின் உயர்வான தரத்தில் நல்லுதாரணம் நிலைநாட்டப்பட்டிருக்கின்றது.

முதல் வசனத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களும் செய்த அந்த பெரும் தியாகத்தைப் பற்றி கூறப்பட்டுள்ளது. இறை இல்லமான கஃபாவைக் கட்டுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு கல்லும் இந்த இறை இல்லம் முழுமையடைந்த பிறகு, தந்தை தனது மகனையும், அந்த மகனிடமிருந்து உருவாகும் தலைமுறையையும் இந்த தண்ணீரல்லாத புற்பூண்டுகள் முளைக்காத இடத்தில் நிரந்தரமாக குடி அமர்த்தப் போகின்றார் என்பதன் பக்கம் சாட்சி அளித்துக் கொண்டிருந்தது. நீ இந்த தண்ணீரல்லாத புற்பூண்டுகள் முளைக்காத இடத்தில் இந்த வீட்டின் பொலிவை நிலைத்திருக்கச் செய்வதற்காக இங்கேயே இருக்க வேண்டும் என்று அந்த மகனுக்கு அவை கவனமூட்டின. இந்த இரண்டு பெரியார்களுக்கு, அல்லாஹ்வின் தூதர்களுக்கு இந்த இறை இல்லம் முழு உலகத்தின் கவனத்தை ஈர்க்கக்கூடியதாக ஆகி விடும் என்ற இறைவனின் வாக்குறுதி மீது நம்பிக்கை இருந்தது. ஆனால் இவை எல்லாம் எப்போது நடக்கும் என்பது பற்றி அவர்களுக்கு என்ன தெரிந்திருக்க முடியும்? அந்த சமயத்தில் முழுக்க முழுக்க தியாகம் செய்வது மட்டும்தான் அவர்களுக்கு தெரிந்தது.

ஆனால் அவ்வாறிருந்தும் பணிவின் இறுதி எல்லையில் அவர்கள் இருந்தனர். உனது இல்லத்தைக் கட்டுகின்ற இந்தப் பணியைச் செய்யும் நாங்கள் இதனை உனது அருளால்தான் செய்கின்றோம். எனவே எங்களது இந்த தியாகத்தை ஏற்றுக் கொள்வாயாக! என்று அவர்கள் துஆ செய்தனர். நாங்கள் செய்த இந்த பணிக்கான பிரதிபலன் கிடைக்க வேண்டியது எங்களுக்குரிய உரிமையாகும். அது விரைவாக எங்களுக்கு கிடைக்க வேண்டும் என எவ்வித பெருமையையும் அவர்கள் வெளிப்படுத்தவில்லை. மாறாக, நன்கு

கேட்பவனும் நன்கு அறியக்கூடியவனுமாக அந்த இறைவன் துஆக்களை கேட்கக் கூடியவனாக இருக்கின்றான்.

எனவே இறைவா! எங்கள் துஆக்களை கேட்பாயாக! எங்களிடம் தியாகம் செய்வதற்கு என்ன இருந்ததோ அதை நாங்கள் தியாகம் செய்து விட்டோம். இனியும் தியாகம் செய்வோம் என்று நாங்கள் உறுதி கூறுகின்றோம். மேலும் எங்களது சந்ததிகளும் இந்த தியாகத்தில் பங்குபெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம் என்று அவர்கள் துஆ செய்தனர். இந்த இரண்டு சான்றோர்களும் இந்த துஆவை செய்தனர். பிறகு இவர்கள்இறைவனைப் பார்த்து இறைவா! நாங்கள் எங்களது உள்ளத்தின் உண்மையான நிலையை உன் முன்னால் வைத்து விட்டோம். நாங்கள் கூறுவதையும் செய்வதையும் நீ நன்கு அறிந்தவனாக இருக்கின்றாய். முழுக்க முழுக்க உனது திருப்தியைப் பெறுவதற்காக மட்டுமே இவற்றை நாங்கள் கூறுகின்றோம்; செய்கின்றோம். நீ எங்களது இந்த தியாகங்களை ஏற்றுக் கொண்டு இந்த வீட்டை விரைவாக உனது வீடாக ஆக்குவாயாக! உனது வீடாக ஆவதனால் ஏற்படும் பரக்கத்தால் இந்த ஒன்றுமற்ற வனாந்தரம், மக்கள் குடி அமர்கின்ற இடமாக ஆகிவிட வேண்டும். உனது கட்டளைக்கேற்ப நாங்கள் எதை புரிந்து கொண்டோமோ அதற்கேற்ப அதை வெளிப்படையாக நிறைவேற்றும் வகையில் இந்த வீடு கட்டப்பட்டது. அதன் மூலம் மக்கள் குடி அமர்கின்ற தலைமையகமாக அது ஆக வேண்டும். ஆனால் அல்லாஹ்வே! உண்மையில் இந்த வீட்டை நிரப்புவது என்பது உனது அருளையே சார்ந்து நிற்கின்றது. இந்த வீட்டை வெளிப்படையாக நிரப்புபவர்களுக்கும் நுண்ணிய பார்வையையும் அகப்பார்வையையும் நீ வழங்குவாயாக! அது அவர்களை உன்னிடம் கொண்டு சேர்ப்பதற்காக இருக்க வேண்டும். ஆன்மீகத்தில் அவர்களை முன்னேறும்படி செய்ய வேண்டும் என்று அவர்கள் துஆ செய்தனர்.

இத்தகைய உணர்வைக் கொண்டவாறே முஸ்லிம்களின் பள்ளிவாயில்கள் கட்டப்படுகின்றன. அவ்வாறு கட்டப்படவும் வேண்டும். அவ்வாறில்லையென்றால், அழகான கட்டடங்கள் ஒன்றுமற்றவையாகி விடும். மிகவும் அழகான பள்ளிவாசல்கள் கட்டப்படுகின்றன. ஆனால், அவர்களிடம் இந்த ஆன்மா இருப்பதில்லை. அது கட்டுப்படுவதன் நோக்கத்தை அடைய முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது வணங்குமிடங்களை அலங்கரிப்பது போன்று பள்ளிவாசல்களில் கலைத்திறனை வெளிப்படுத்தும் வேலைப்பாடுகள் இருக்கக் கூடாது என்று கூறியுள்ளார்கள். ஆனால் பல பள்ளிவாசல்களும் இவ்வாறான வேலைப்பாடுகளை கொண்டதாக இருப்பதை நம்மால் பார்க்க முடிகின்றது. அவற்றை அரசர்களும், செல்வந்தவர்களும் கட்டினார்கள். அவற்றில் சில பள்ளிவாசல்கள் மீது அரசர்கள் தங்கமுலாம் பூசியுள்ளனர். ஆனால் இவை பள்ளிவாசல்களின் அழகல்ல. இந்த மெருகூட்டும் வேலைப்பாடுகளும் தங்கமுலாம் பூசுவதும் அவற்றிற்கு அழகை தராது. பள்ளிவாசல்களின் அழகு அதை நிரப்புவதில்தான் இருக்கின்றது. அவ்வாறு நிரப்புவதும் முழுக்க முழுக்க அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவே இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்தூது (ரலி) அவர்கள் ஒருமுறை கூறினார்கள்:**

நான் ஒரு அரபு நாட்டிற்குச் சென்றிருந்தேன். (எகிப்து நாட்டைப் பற்றியே அவர்கள் குறிப்பிடுகின்றார்கள் என்று நினைக்கின்றேன்). அங்கு ஓர் அழகிய பெரிய பள்ளிவாசலுக்கு நான் சென்ற போது, 4 அல்லது 5 தொழுகையாளிகள் ஒரு மூலையில் நின்று தொழுது கொண்டிருப்பதை நான் பார்த்தேன். இது என்ன நடக்கின்றது? என்று அவர்களிடம் நான் கேட்ட போது, அவர்களுக்கு தொழ வைத்துக் கொண்டிருந்த அந்த பள்ளிவாசலின் இமாம் அவர்கள் மக்கள் தொழுகைக்காக வருவதில்லை. எனவே வெட்கத்தின் காரணமாக நான் மிஹ்ராபில் நின்றவாறு தொழ வைப்பதில்லை. ஏனென்றால், புதிதாக இங்கு வருபவர்கள் இதைப் பார்த்து என்ன சொல்வார்கள்? இவ்வளவு பெரிய அழகிய பள்ளிவாசல் இருக்கின்றது. ஆனால் அதில் தொழக் கூடியவர்கள் நாலைந்து பேர்தான் என்று கூறுவார்கள். அதனால்தான் நாங்கள் ஒரு மூலையில் நின்று தொழுகின்றோம். இதன் மூலம் இங்கு வரும் மக்கள் அசல் தொழுகை நடந்து விட்டது. பிறகு வந்த மக்கள் தான் தொழுகின்றார்கள் என்று நினைப்பார்கள் என்று அவர் கூறினார்.

ஆனால் இன்னொரு சூழ்நிலையையும் நம்மால் பார்க்க முடிகிறது. அதாவது பள்ளிவாசல்களுக்கு மக்கள் செல்கின்றார்கள். பள்ளிவாசல் பெரும் எண்ணிக்கையில் நிரம்பி இருக்கின்றது. ஆனால் பொதுவாக

உள்ளங்கள் ஒரு பள்ளிவாயிலுக்கு செல்பவரிடம் இருக்க வேண்டிய அந்த ஆன்மாவை விட்டும் காலியாக இருக்கின்றது. தொழுகையின் போதும் பௌதீகம் மிகைத்து நிற்கின்றது. முழுக்க முழுக்க அல்லாஹ்வின் பக்கம் முழுமையான கவனம் இருப்பதில்லை.

எனவே நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் பள்ளிவாசல்களைக் கட்டும் போது அவற்றை அல்லாஹ்வின் பக்கம் நாம் குனிவதற்காகவும் அவனது திருப்தியைப் பெறுவதற்காகவும் கட்ட வேண்டும். பள்ளிவாசல்களைக் கட்டுவதற்காக தியாகம் செய்யும் போது அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். அதில் எவ்வித பெருமையும் கொள்ளாதீர்கள். ஏனென்றால், ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் செய்த தியாகங்களில் இலட்சத்ததில் ஒரு பங்காகக் கூட நமது தியாகங்கள் இருக்க முடியாது. இன்னும் சொல்வதென்றால் அதை விட குறைவாகவே நமது தியாகங்கள் உள்ளன. பொருளாதார தியாகத்தை மட்டும் தான் நாம் செய்கின்றோம். அதுவும் கூட நமது வசதிகளுக்கேற்பவே நாம் செய்கின்றோம். நிச்சயமாக இன்றைய உலகில் பொருளை தியாகம் செய்வது, நல்ல நோக்கத்திற்காக தியாகம் செய்வது மிகப்பெரிய தியாகமேயாகும். நாம் எவற்றிற்கு முன்னுரிமை வழங்கியிருந்தோமோ அந்த நிலைமையை மாற்றிக் கொண்டு பொருள் தியாகம் செய்கின்றோம்.

மேலும் பள்ளிவாசல்களைக் கட்டுவது பாராட்டப்பட வேண்டிய ஒரு பணியாகும். பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். அல்லாஹ்விடத்தில் அப்படிப்பட்ட மக்கள் நற்கூலி பெறுபவர்களாக இருக்கின்றார்கள். அல்லாஹ்வின் அருளால் மேற்கத்திய நாடுகளில் ஜமாஅத்திற்கு இதன் பக்கம் அதிகம் கவனம் ஏற்பட்டுள்ளது. பள்ளிவாசல்கள் கட்டப்படுகின்றன. மாறாக, சிலர் எதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதில் எந்த அளவு ஈடுபாட்டுடன் தங்களை மாற்றிக் கொண்டனர் என்றால் தங்களிடம் தேவைக்கு அதிகமாக இருக்கின்ற செல்வத்தை அவர்கள் இவ்வழியில் செலவு செய்யவில்லை. மாறாக, தங்களை துன்பங்களில் ஆழ்த்திக் கொண்டு அவர்கள் இந்த தியாகங்களைச் செய்கின்றார்கள். ஆனால் அவ்வாறிருந்தும் நாம் நினைவில் வைக்க வேண்டியது நமக்கு இவ்விஷயத்தில் எப்போதும் எவ்வித பெருமையும் இருக்கக் கூடாது.

இந்த பள்ளிவாசலைக் கட்டுவதற்கு ஏறக்குறைய 12 இலட்சம் பவுண்டு அதாவது 1.2 மில்லியன் பவுண்டு செலவாகியுள்ளது. ஏறக்குறைய இந்த தொகையைத் தான் செலுத்துவதாக ஜமாஅத் வாக்குறுதி தந்திருந்தது. அல்லாஹ்வின் அருளால் இதற்கான தொகையை செலுத்தியும் வருகின்றார்கள். 75% கொடுத்து முடித்து விட்டார்கள். சிலர் பெரும் பெரும் தியாகங்களைச் செய்திருக்கின்றார்கள். நான் பார்க்கின்றேன். தனிப்பட்ட நபர்கள் 84,000 பவுண்டுகள், 78,000 பவுண்டுகள் என இந்த அளவு பொருள் தியாகம் செய்துள்ளனர். ஒவ்வொரு தனிப்பட்ட நபர் இவ்வளவு தியாகம் செய்துள்ளனர். 15,000, 20,000 மற்றும் 30,000 தொகையை தந்தவர்களும் உள்ளனர். ஏறக்குறைய 11 நபர்களின் வாக்குறுதியை நான் பார்த்த போது அது மூன்று இலட்சத்திற்கும் அதிகமாக இருக்கின்றது. இன்றைய சூழ்நிலையில் ஜமாஅத் சகோதரர்கள் மிகப்பெரும் தியாகத்தை செய்துள்ளனர். அவ்வாறிருந்தும் ஒவ்வொரு தியாகமும் நம்மை பணிவை மேற்கொள்வதன் பக்கம் கவனமூட்டக்கூடியதாக இருக்க வேண்டும். இத்தகைய தியாகங்கள் எல்லாம் இருந்தும் கூட நமக்கு முன்னால் அல்லாஹ் எடுத்து வைத்துள்ள முன்மாதிரி, நமது தியாகங்கள் அற்பமானது; அவற்றிற்கு எவ்வித தகுதியும் இல்லை என்பதை அறிவுறுத்துகிறது.

இரண்டாவதாக, இந்த வீட்டை நாம் நிரப்பும்போதுதான் நமது தியாகங்களுக்குரிய பலன் நமக்கு கிடைக்கும். மக்கள் குடிபெயர்ந்து செல்லாத வனாந்தரமாக அந்த இடம் இருந்தது. அங்கு அல்லாஹ்வின் வீடு கட்டப்பட்டது. இந்த நாடுகள் ஆன்மீகமான முறையில் வறண்டுபோன பகுதிகளாக உள்ளன. இந்த பகுதிகளை செழுமையாக்கி இவற்றை ஆன்மீகத்தால் நிரப்ப வேண்டும். இதற்காகவே நாம் ஐரோப்பாவில் பள்ளிவாசல்களைக் கட்டுகின்றோம்.

எனவே, இது மிகப்பெரிய பணியாகும். இதை எப்போதும் நாம் நமது நினைவில் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும். ஜுமுஆவில் மக்கள் கூட்டம் வந்து நிரம்புவதால் மட்டும் நமது பள்ளிவாசல்களை நாம் நிரப்பி விட முடியாது. மாறாக, மற்ற தொழுகைகளில் வருபவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக இருக்க வேண்டும்.

இன்று இந்த பள்ளிவாசலை நாம் திறந்து வைக்கும் இந்த தருணத்தில் ரப்பனா தகப்பல் மின்னா இன்னக்க அன்தஸ் ஸமீவுல் அலீம் என்ற துஆவை நீங்கள் செய்ய வேண்டும். நாம் நமது இறைவனிடம் உடன்படிக்கை செய்தவாறு இறைவா! இந்த பொருள் தியாகங்களை நீ ஏற்றுக் கொண்டு எங்களது ஆன்மீக முன்னேற்றத்திற்கான ஏற்பாட்டை செய்வாயாக! என்று துஆவும் செய்யும் போதுதான் நமது பொருள் தியாகங்கள் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியைப் பெறுகின்றது. இறைவா! இந்தப் பள்ளிவாசலை நிரப்புவதற்கான நல்வாய்ப்பை எங்களுக்கு வழங்குவாயாக! ஏனென்றால், முழுக்க முழுக்க உன்னை வணங்குவதற்காகவே இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது என்பதை நீ அறிவாய். எனவே, இந்த பகுதியை ஆன்மீகத்தில் முன்னேறிச் செல்கின்ற மக்களால் நிரப்புவாயாக! ஏனென்றால், உனது திக்ரால் இந்த பள்ளிவாசல் நிரம்பியிருக்க வேண்டும் என்பதற்காகவே இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. எனவே நமது தியாகங்களை ஏற்றுக் கொண்டு உனது நெருக்கத்திற்குரிய வழியாக அமைகின்ற அந்த ஆன்மீக தகுதியை எங்களுக்கு வழங்குவாயாக! அதன் மூலமாக உனது அருட்கொடைகளைப் பெற்று நாங்கள் உனது சுவர்க்கத்திற்கு வாரிசாகி விட வேண்டும்.

**முஸ்னது அஹ்மது பின் ஹம்பலில் உள்ள ஒரு நபிமொழியில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

கியாமத் நாளன்று கண்ணியமிக்க கம்பீரமான இறைவன் கூறுவான். ஒன்றுகூடி இருப்பவர்கள் விரைவில் கண்ணியத்தையும் சிறப்பையும் பெறுபவர் யார்? என்பதை அறிந்து கொள்வார்கள். அப்போது ஒருவர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கண்ணியத்தையும் சிறப்பையும் பெறுபவர்கள் யார்? என்று கேட்டார். அதற்கு பள்ளிவாசல்களில் அல்லாஹ்வை நினைவுகூறும் சபைகளைக் கூட்டக்கூடியவர்களே அவர்களாவர் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**புகாரியில் ஒரு நபிமொழி வருகிறது. ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

எவர்கள் காலையிலும் மாலையிலும் பள்ளிவாசல்களுக்கு செல்வாரோ அல்லாஹ் அப்படிப்பட்டவருக்கு சுவர்க்கத்தில் தனது விருந்தோம்பலுக்கான ஏற்பாட்டை செய்துள்ளான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எனவே நமது பள்ளிவாசல்கள் கண்ணியம், சிறப்பு ஆகியவற்றின் தரத்தை நிலைநாட்டக் கூடியவையாக இருக்க வேண்டும்.

அல்லாஹ்வின் பார்வையில் இந்த பள்ளிவாசலும் இதில் வருபவர்களும் அல்லாஹ்வின் விருப்பத்திற்குரிய மக்களாக இருக்கும்படி அல்லாஹ் செய்வானாக! அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர்களாக இருக்க வேண்டும். சுவர்க்கத்தில் அல்லாஹ்வின் விருந்தோம்பலிலிருந்தும் பங்கு பெறுபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். இந்த எண்ணத்துடன் பள்ளிவாசல்களைக் கட்டும் அந்த மக்கள் எத்தகைய நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றனர்? மேலும் இந்த எண்ணத்துடன் தான் அவர்கள் பள்ளிவாசல்களுக்கு வருகின்றார்கள். இந்த உலகிலுள்ள சுவர்க்கத்தை மட்டும் அவர்கள் பெறவில்லை. மாறாக மறுவுலகிலும் அவர்களுக்கு சுவர்க்கம் கிடைக்கின்றது. அல்லது இவ்வாறும் இதனை கூறலாம். நபிமொழியில் குறிப்பிடப்பட்டுள்ள மறுவுலகில் கிடைக்கும் சுவர்க்கத்தை மட்டும் அவர்கள் தேடவில்லை. மாறாக இவ்வுலகில் கிடைக்கும் சுவர்க்கத்தையும் அவர்கள் தேடுகின்றார்கள்.

நமது பெரும்பாலான பள்ளிவாசல்களில் மேலேயுள்ள கலசத்திற்கு கீழே வாசகம் எழுதப்பட்டிருக்கும். கலசத்தின் உட்பகுதியில் இந்த வாசகம் எழுதப்பட்டுள்ளது. அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் நினைவினாலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன என்ற வாசகம் எழுதப்பட்டள்ளது.

எவர்களது உள்ளங்கள் அமைதி அடைகின்றனவோ அவர்களுக்கு இதை விட பெரிய சுவர்க்கம் வேறு எதுவாக இருக்க முடியும்?

இன்று உலகில் எந்த அளவு அமைதியின்மை உருவாகி இருக்கின்றதோ அது இறைவனை மறந்து விட்டதனாலேயே உருவாகியுள்ளது. இறைவனை நினைவுகூர்ந்து அவனது திக்ரால் தங்கள் நாவுகளை ஈரமாக வைத்திருப்பவர்கள் துன்பங்களைக் கூட இறைவனுக்காக சகித்துக் கொள்கின்றார்கள். அவர்கள் அவற்றை

இறைவனது திருப்தியைப் பெறுவதற்கான வழியாக ஆக்கிக் கொண்டு தங்களது உள்ளங்களுக்கு நிம்மதி கிடைப்பதற்கான காரணிகளாகவும் அவற்றை ஆக்கிக் கொள்கின்றனர்.

நூற்றுக்கணக்கான மக்கள் உலகில் தற்கொலை செய்து கொள்கின்றனர். நாள்தோறும் இது நடக்கின்றது. ஏனென்றால், உலக துன்பங்களை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அல்லது சிலருக்கு உலக துன்பங்களின் காரணமாக எந்த அளவு தாக்கம் ஏற்படுகின்றதென்றால் அவர்களுக்கு இதனால் மாரடைப்பு ஏற்பட்டு விடுகின்றது. கடந்த சில நாட்களுக்கு முன் எனக்கு ஒருவர் பாகிஸ்தானிலிருந்து கடிதம் எழுதியிருந்தார். அங்கு கடுமையான புயலும் மழையும் வந்தது. ஷேக்பூரா பகுதியில் இது நடந்தது என நினைக்கின்றேன். மக்களது விளைச்சல்கள் அழிந்து போனது. ஒரு விவசாயி பூசணிக்காய் விளைந்து வருகின்ற தனது வயலுக்கு சென்று பார்த்த போது எல்லாமே அழிந்து போயிருப்பதை அவர் பார்த்தார். இதனால் அவருக்கு எந்த அளவு துக்கம் ஏற்பட்டது என்றால் அந்தக் காட்சியைப் பார்த்ததுமே அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு, அவர் வஃபாத் ஆகி விட்டார். உலக இழப்புகளால் அல்லாஹ்வைச் சார்ந்திருப்பவர்களுக்கு உலக துன்பங்கள் ஏற்படுவதில்லை. மாறாக, ஒவ்வொரு துக்கத்தின் போதும் அவர்கள் அல்லாஹ்வுடன் ஒன்றி விடுகின்றனர்.

ஒரு நம்பிக்கையாளர் எப்போதும் துன்பங்களின் போது அல்லாஹ்வின் மடியில் அமர்ந்தவாறு உள்ளத்தில் நிம்மதியைப் பெறுகின்றனர்.

திருக்குர்ஆன் சூரா ரஹ்மானில் இறைவன் கூறுகின்றான்: எவர் தனது இறைவன் முன்னால் நிற்பதற்கு அஞ்சுகின்றாரோ அவருக்கு இரு சுவர்க்கங்கள் உள்ளன.

அல்லாஹ்வை நினைவு கூர்வது, அவனுக்கு அஞ்சியவாறு அவனை வணங்குபவர்கள் நிம்மதியடைந்த உள்ளத்தைப் பெற்று இவ்வுலகிலும் சுவர்க்கத்தைப் பெறுகின்றனர். ரஹ்மானின் அடியாராக ஆவதன் மூலம் இவ்வுலகில் ஓர் அடியாருக்கு கிடைக்கும் சுவர்க்கம் அவரை மறுவுலகில் கிடைக்கும் சுவர்க்கத்திற்கும் வாரிசாக்கி விடுகின்றது.

பிறகு நான் ஓதிய அடுத்த வசனத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் மற்றும் இஸ்மாயீல் (அலை) அவர்கள் இந்த துஆவை கேட்கின்றார்கள். எங்கள் இறைவா! எங்கள் இருவரையும் நல்லடியார்களாக ஆக்குவாயாக!

மீண்டும் பணிவின் எல்லைக்கே அவர்கள் சென்று விட்டார்கள். எல்லா தியாகங்களையும் செய்த பிறகும், இறைவனது தூதர்களாக இருந்த பிறகும் கூட அவர்கள் இறைவா! எங்களை உனது நல்லடியார்களாக ஆக்குவாயாக! என்று அவர்கள் துஆ செய்கின்றார்கள்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது மனைவியையும், மகனையும் தண்ணீரில்லாத வறண்ட வனாந்தரத்தில் இறைவனது கட்டளையை நிறைவேற்றும் வகையில் விட்டு விட்டு வந்த பிறகும் கூட இறைவனிடம் இறைவா! என்னை உனக்கு கட்டுப்பட்டு நடப்பவனாக ஆக்குவாயாக! என்று கேட்கின்றார்கள். அவர்கள் எல்லாவற்றையும் அல்லாஹ்விற்காக வழங்கி விட்டார்கள். மனைவியையும், பிள்ளையையும் அவனது வழியில் தந்து விட்டார்கள். அதற்குப் பிறகும் உனக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடக்கும் வகையில் உள்ள கீழ்படிதலை மேற்கொள்பவனாக என்னை ஆக்குவாயாக! என்று கேட்கின்றார்கள்.

மகனின் கழுத்தில் கத்தியை வைத்து அறுக்க தயாராகியது கூட முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காக அவர்கள் செய்த செயலாக இருந்தது. அவ்வாறிருந்தும் எங்களை உனது ஒவ்வொரு கட்டளையையும் ஏற்றுக் கொள்பவனாகவும் அவற்றிற்கு கீழ்படிந்து நடப்பவர்களாகவும் நல்லடியார்களாகவும் எங்களை ஆக்குவாயாக! என்று அவர்கள் துஆ செய்கின்றார்கள்.

எனவே, இந்த தகுதியைத்தான் ஒரு நம்பிக்கையாளர் பெற வேண்டும். ஒருபோதும் தமது நன்மைகள் மீது அவருக்கு பெருமை இருக்கக் கூடாது; அவற்றை நம்பியும் அவர் இருக்கக்கூடாது. ஒருபோதும் தங்களது தியாகங்களை ஒரு பொருட்டாக அவர்கள் கருதவில்லை. மாறாக, இறைவனிடத்தில் பயந்து பயந்து அல்லாஹ்வே! எங்களது செயல்கள் ஒன்றுமேயில்லை. உனது அருள் இருந்தால் நாங்கள் நல்லடியார்களாக ஆக முடியும். ரஹ்மானின் அடியாராக ஆக முடியும். எனவே, எங்களது துஆ, எங்களது பணிவான

வேண்டுகோள் என்னவென்றால், எங்களை நன்மையில் நிலைத்திருக்கும்படி செய்வாயாக! மேலும் உன்னுடன் ஆழ்ந்த பற்றுள்ள தொடர்பை வைத்திருப்பவர்களா எங்களை ஆக்குவாயாக! உனது திருப்திக்கேற்ப செல்பவர்களாக ஆக்குவாயாக! என்று அவர்கள் வேண்டினர். இந்த மகத்தான நோக்கத்திற்காகத்தான் மனிதன் படைக்கப்பட்டிருக்கின்றான்.

பிறகு எங்களுக்காக மட்டுமின்றி எங்களது சந்ததிகளுக்காகவும் நாங்கள் துஆ செய்கின்றோம். அந்த துஆ இதுவேயாகும்.

எங்களது சந்ததிகளிலிருந்தும் உனக்கு கட்டுப்பட்டு நடந்து உனது கட்டளைகளை நிறைவேற்றுகின்ற சமுதாயத்தை உருவாக்குவாயாக! என்றும் அவர்கள் துஆ செய்தார்கள்.

அல்லாஹ்வின் வீட்டை கட்டி விட்டு தங்களது வாழ்நாள் வரை மட்டும் அதை நிரப்புவது பற்றிய கவலை அவர்களுக்கு இருக்கவில்லை. மாறாக இதை நிரப்புவதற்கும், இதிலிருந்து ஆன்மீக அருளைப் பெறுவதற்கும், உனக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பதற்கும் எமது சந்ததிகளிலிருந்தும் இப்படிப்பட்ட மக்கள் உருவாகிக் கொண்டே இருக்க வேண்டும் என்று துஆ செய்கின்றனர். இதுவே ஒரு நம்பிக்கையாளரின் துஆவாக இருக்க வேண்டும்.

இந்த பாடம் நமக்கு கற்றுத் தரப்பட்டுள்ளது. அதாவது பள்ளிவாசலுடன் வயதில் பெரியவர்கள், முதியவர்கள் ஆகியவர்களுக்கு மட்டும் தொடர்பு இருக்கக் கூடாது. அல்லது நேரம் கடைக்கும் மக்களுக்கு இந்த தொடர்பு இருக்கக் கூடாது. மாறாக தங்களது பணிகளுக்கு மத்தியிலும் இறைவனை வணங்குவதற்காக நேரத்தை ஒதுக்கி அவர்கள் இங்கு வந்து இந்தப் பள்ளிவாசலை நிரப்ப வேண்டும். நமது சந்ததிகளுககும் தொடர்பை ஏற்படுத்த முயறசி செய்ய வேண்டும். நமது சந்ததிகளிடம், இளைஞர்களிடம், சிறுவர்களிடம் இபாதத்திற்கான ஒரு துடிப்பு உருவாக வேண்டும். இதற்காக எங்கு செயல் அளவிலான முயற்சிகள் தேவைப்படுகின்றதோ அங்கு இதற்கான மிகப்பெரும் வழியாக துஆ இருக்கின்றது.

உள்ளங்களின் நிலையை அறிந்த, நன்கு கேட்கக்கூடிய அல்லாஹ் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் துஆக்களை கேட்கின்றான். எனவே துஆ கேளுங்கள். இறை வணக்கத்திலும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்ப செயல்படுவதிலும் உள்ள ஆர்வமும் துடிப்பும் ஒரு தலைமுறைக்குப் பிறகு அடுத்த தலைமுறையில் உள்ளவர்களிடம் உருவாகிக் கொண்டே செல்ல வேண்டும். இறைவணக்கத்திலும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்ப செயல்படுவதிலும் நீங்களே சோம்பேறித்தனம் காட்டினால் பிறகு அடுத்த தலைமுறையிலும் இந்த சோம்பல் இருக்கும். ஒவ்வொரு பள்ளிவாசல் கட்டப்படும் போதும் எங்கு நமது நிலைமைகளின் பக்கம் கவனம் செலுத்துவதும் துஆக்களும் தேவைப்படுகின்றதோ அங்கு நமது சந்ததிகளின் தர்பிய்யத்தின் பக்கமும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை), ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) ஆகியோர் செய்த வஇன்னா மனாஸிகனா வதுப் அலைனா என்ற துஆ நமது தர்பிய்யத் மற்றும் இபாதத்தின் பக்கம் நமக்கு கவனமூட்டுவதுடன் நமது சந்ததிகளை சிறந்த நிலைமைகளின் பக்கம் கொண்டு செல்வதன் பக்கமும் நமக்கு கவனமூட்டுகிறது.

மனாஸிகனா என்பதன் பொருள் இறைவணக்கம் மற்றும் இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் என்பதாகும். இறைவணக்கத்துடன் இறைவனுக்கு செலுத்த வேண்டிய எல்லா விதமான உரிமைகள் தொடர்பாகவும் நமக்கு கவனமூட்டப்பட்டுள்ளது. இந்த இறைவணக்கம் மற்றும் இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை செலுத்திய பிறகு நான் பெரிய வேலையை செய்து விட்டேன் என்று எவரும் கருதக்கூடாது. துஆவில் வதுப் அலைனா எங்களது தவ்பாவை ஏற்றுக் கொள்வாயாக! எங்கள் பக்கம் கவனம் செலுத்துவாயாக! என்று கூறுகின்றார்கள். எப்படி எங்களது தவ்பாவை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றால் எங்களிடமிருந்து சிறிய, பெரிய தவறுகள் ஏற்பட்டிருந்தாலும் அவற்றை நீ மன்னித்து விட வேண்டும். நிச்சயமாக நீ தவ்பாவை ஏற்றுக் கொள்பவனம் கருணை காட்டுபவனுமாவாய்.

தொடர்ச்சியாக நமக்காக இந்த துஆவை நாம் செய்யும் போது பள்ளிவாசலைக் கட்டியதற்கான நோக்கமும் நிறைவேறி விடும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கான முயற்சியை செய்வதற்கான

உரிமையை செலுத்துவதன் பக்கமும் கவனம் ஏற்படும். தனது சந்ததிகளையும் இவ்வழியில் செல்ல வைப்பதற்கான முயற்சிகள் ஏற்படும். மேலும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை), ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதனால் இவ்வுலகில் அல்லாஹ் நீடிக்கச் செய்துள்ள அந்த உயர்வான பரக்கத்துகள் மற்றும் கருணைகளின் அருள்களும் நமக்கு கிடைக்கும். அந்த பரக்கத்துகள் உலகை தனது அரவணைப்பின் கீழ் கொண்டு வந்து எத்தகைய புரட்சியை ஏற்படுத்தியதென்றால் அதனால் மரணித்தவர்கள் உயிர் பெற்றனர். ஆன்மீகத்தின் புதிய புதிய நீரூற்றுகள் வெளிப்பட ஆரம்பித்தன. இபாதத்துகளின் எத்தகைய தரம் நிலைநாட்டப்பட்டது என்றால் அதை இதற்கு முன் யாரும் பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை. இறைவணக்கங்களின் இறுதி எல்லையைத் தொட்ட அந்த மகத்தான நபி (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். இறைவன் மீதுள்ள ஆழ்ந்த பற்று, இறைவனுக்குள்ள உரிமைகளை செலுத்துதல் ஆகியவையும் அதன் இறுதி எல்லையை அடைந்தன. பிறகு அவை அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்படும் தகுதியை பெற்றன. பிறகு இந்த எல்லா விஷயங்களும் எத்தகைய உயர்வான தகுதியை சென்றடைந்தது என்றால், அல்லாஹ் தனக்கு மிகவும் பிரியமான அந்த தூதர் காத்தமுல் அன்பியா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மூலமாக இந்த அறிவிப்பை செய்ய வைத்தான்.

*நீர் அறிவிப்பீராக! நிச்சயமாக எனது தொழுகையும், எனது தியாகமும், எனது வாழ்வும், எனது மரணமும் எல்லா உலகங்களையும் படைத்து வளர்த்துக் காக்கின்ற அல்லாஹ்விக்காகவே இருக்கின்றது. (6:163)*

இங்கு இபாதத்துகள், தியாகங்கள் மற்றும் ஒவ்வொரு செயலின் எத்தகைய உயர்வான தரம் நிலைநாட்டப்பட்டது என்றால் இதற்கு முன்னர் யாரும் இதனை பார்க்கவில்லை; கேட்கவுமில்லை.

இது நமது எஜமானரும் தலைவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கு கிடைத்த உயர் தகுதியாகும். இதனால்தான் அல்லாஹ், அவனது நேசம் இந்த மகத்தான தூதரைப் பின்பற்றி நடக்காமல் ஒருவருக்கு கிடைக்க முடியாது என்று அறவித்தான். இந்த அழகிய முன்மாதிரியின் மூலம் இபாதத்துகள், தியாகங்கள் ஆகியவற்றின் தரம் நிலைநாட்டப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்களின் தூய்மையாக்கும் ஆற்றலிலிருந்தும் எவர்கள் நேரடியாக அருள்களைப் பெற்றனரோ அவர்களுக்கும் பெருமானார் (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரிக்கேற்ப செயல்பட்டதன் விளைவாக அவர்களிடமிருந்த அருள்களைப் பெறுவதற்கான புதிய புதிய வாசல்கள் திறந்து தரப்பட்டது. முழு இரவும் இறைவனை வணங்கி பகல் நேரத்தில் தியாகங்களைச் செய்பவர்கள் உருவாயினர். ஆன்மீகமான முறையில் மரணித்திருந்தவர்கள் மிக உயர்வான வாழ்க்கையைப் பெற்றுக் கொண்டனர். இந்த மகத்தான தூதர் கியாமத் வரை எல்லா சமுதாயங்களுக்கும், எல்லா காலத்திற்குமாக வந்தவர்கள் ஆவார்கள். இந்த அருள் இன்றும் நீடித்திருக்கின்றது. இந்த அழகிய முன்மாதிரி இன்றும் முன்பு இருந்தது போன்றே ஒளிமயமாகவும் பிரகாசமாகவும் இருக்கின்றது. எந்த மகத்தான போதனை பெருமானார் (ஸல்) அவர்கள் மீது இறங்கியதோ, எந்த போதனைகளை அவர்கள் கொண்டு வந்தார்களோ, அவை இன்றும் தனது முழுமையான ஒளியுடனும் பொலிவுடனும் மின்னுகின்றது.

இந்த மகத்தான நபிக்கு அல்லாஹ் இந்தக் காலத்தில் எத்தகைய உண்மையான அடிமையை வழங்கியுள்ளான் என்றால் அவர்களை பின்னவர்களில் எழுப்பி மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த அதே பணிகளைச் செய்ய வைத்தான். வசனங்களை ஓதிக்காட்டுவது, உள்ளங்களை தூய்மைப்படுத்துவது, வேதத்தை கற்றுக் கொடுப்பது, அதன் கட்டளைகளிலுள்ள ஞானத்தை விளக்குவது ஆகிய பணிகளை தொடர்ந்து செய்ய வைத்தான்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களது இந்த உண்மையான அடியாரை ஏற்றுக் கொண்டவர்களும் தங்களது இறைவணக்கங்களையும், செயல்களையும் தனது எஜமானரான பெருமானார் (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரிக்கேற்ப அமைத்துக் கொள்ள முயற்சி செய்தனர். இஸ்லாமிய போதனைகளை அவர்கள் எப்படி செயல்படுத்தினர் என்றால் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் கூட இஸ்லாமிய நல்லொழுக்கத்தின் செயல் அளவிலான முன்மாதிரியை பார்க்க வேண்டும் என்றால் அவற்றை இந்த மக்களிடம் பாருங்கள் என்று கூற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகினார்கள்.

இந்த உயர்வான தரத்தை நமது முன்னோர்கள் நிலைநாட்டி எதிரிகளின் வாயை மட்டும் அவர்கள் அடைக்கவில்லை. மாறாக, உண்மையான இஸ்லாத்தின் செயல் அளவிலான காட்சியை அஹ்மதிய்யா ஜமாஅத்திலுள்ள நபர்களிடம் பாருங்கள் என்று கூறி அவர்களை இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள வைத்தனர். இன்றும் நமக்கு இந்த மகத்தான நோக்கத்தை அடைய வேண்டியதுள்ளது. இதை நம் முன்னால் வைத்து செயல்பட்டவாறு நாம் உலகின் வாயை அடைக்க வேண்டும். உங்களது நல்ல செயல்கள் மூலம் உலகத்தை இஸ்லாத்தின் அழகிய போதனைகளை விரும்பக் கூடியவர்களாக ஆக்க வேண்டும். உங்களது இறைவணக்கங்கள், தொழுகைகள் ஆகியவற்றால் நீங்கள் ஸஜ்தா செய்யும் இடங்களை ஈரமாக்கியவாறு அல்லாஹ்வின் அருள்களை ஈர்க்க வேண்டும். உங்களுடன் உங்கள் சந்ததிகளையும் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குரிய உரிமையை செலுத்துபவர்களாக ஆக்குவதுடன் அவர்களை பள்ளிவாசல்களுடன் இணைந்திருக்கும்படி செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் பள்ளிவாசல்களை கட்டுவதற்கான உரிமையை செலுத்த முடியும். அப்போதுதான் நாம் ரப்பானா தகப்பல் மின்னா இன்னக்க அன்தஸ் ஸமீவுல் அலீம் என்ற துஆவிலிருந்து அருளைப் பெறுபவர்களாக ஆக முடியும். அப்போதுதான் காலத்தின் இமாமின் பைஅத்தின் கீழ் வந்ததற்கான சரியான உரிமையை செலுத்தியவர்கள் என்று நம்மைப் பற்றி கூற முடியும். அப்போதுதான் அல்லாஹ்வின் நேசரான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றியவாறு அல்லாஹ்வின் நேசத்தைப் பெற்று நாம் நமது இம்மையையும், மறுமையையும் சரிசெய்து கொண்டவர்களாக ஆக முடியும்.

எனவே, இன்று இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டதுடன் பலவீனமான இயல்பை உடைய மக்கள் தங்களது புதிய வழிகளை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அது உங்களது உடன்படிக்கைகளை நிறைவேற்றும் வழிகளாகும். அது பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்டுள்ள நேசம் உண்மையானது என்பதை நிரூபிக்கின்ற வழிகளாகும். அது அல்லாஹ்வின் அன்பை ஈர்க்கின்ற வழிகளாகும். இவ்வாறே சிறந்த தரத்திலுள்ள, தொழுகைகளை பேணுவதில் கவனம் செலுத்துகின்ற, பள்ளிவாசல்களுக்கு வந்து அவற்றை நிரப்புவதில் கவனமுள்ளவர்களும் கூட இந்த விஷயங்களில் உயர்வான தகுதிகளைப் பெறுவதற்காக தங்களது இறை வணக்கங்களிலும் இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளைச் செலுத்துவதிலும் உயர்வான தரத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.

இந்தப் பள்ளிவாசல் இங்குள்ள ஜமாஅத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதற்குரிய ஊடகமாக இருக்க வேண்டும். நான் அறிந்த தகவலின்படி ஆண்களுக்கு இங்குள்ள பெரிய ஹாலில் 760 தொழுகையாளிகள் தொழுவதற்கான இடம் இருக்கின்றது. ஒவ்வொரு தொழுகையிலும் இதனை விரைவாக நிரப்புவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறே என்னிடம் கொடுத்த அறிக்கையில் பெண்களுக்கு 560 தொழுகையாளிகள் தொழுவதற்கான இடம் இருக்கின்றது என்று கூறியுள்ளார்கள். மேலும் இரண்டு ஹால்களில் தேவைப்படும் போது 680 தொழுகையாளிகள் தொழ முடியும். மொத்தமாக இந்தப் பள்ளிவாசலில் ஏறக்குறைய 2000 தொழுகையாளிகள் தொழ முடியும்.

'தொழ முடியும்' என்ற இந்த சொற்றொடரை 'தொழுகின்றனர்' என்று விரைவாக மாற்ற முயற்சி செய்யுங்கள். அப்போதுதான் பள்ளிவாசலைக் கட்டுவது மற்றும் இறைவணக்கம் ஆகியவற்றிற்கான உரிமையை உங்களால் செலுத்த முடியும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை உங்களுக்கு வழங்குவானாக!

அல்லாஹ்வின் அருளால் U.K. ஜமாஅத்தையும் சேர்த்து முழு ஐரோப்பாவிலும் பள்ளிவாசல்களைக் கட்டுவதன் பக்கம் கவனம் ஏற்பட்டு வருகின்றது. ஆனால் இவ்வாறு கட்டப்படுகின்ற பள்ளிவாசல்களின் அழகு தொழுகையாளிகளைச் சார்ந்ததாக இருக்கின்றது. நான் ஆய்வு செய்து பார்த்தேன். 2003 ஆம் ஆண்டில் மஸ்ஜித் பைத்துல் ஃபுதூஹ் திறந்து வைக்கப்பட்டது. அதற்கு முன் முறையான பள்ளிவாசலாக மஸ்ஜிது ஃபஸ்ல் இருந்து வந்தது. அதற்குப் பிறகு 14 புதிய பள்ளிவாசல்களைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் U.K. ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளான். இவை முறையாக பள்ளிவாசல்களாக இயங்கி வருகின்றன.

ஐரோப்பாவில் இதற்கு முன் 13 பள்ளிவாசல்கள் இருந்தன. கடந்த 7 அல்லது 8 வருடங்களில் பள்ளிவாசல்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 57 ஆக ஆகி விட்டது. ஏறக்குறைய என்று நான் கூறக்காரணம் இன்னும் ஒரு பள்ளிவாசலின் கட்டுமானப் பணிகள் நிறைவடைவதற்கு அதன் இறுதிக் கட்டத்தை அது

அடைந்து விட்டது. எனவே, 57 பள்ளிவாசல்கள் உருவாகி விட்டது. அதாவது, கடந்த 7 அல்லது 8 வருடங்களில் 44 பள்ளிவாசல்கள் ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் அதிகமாக கட்டப்பட்டுள்ளது. இதில் ஜெர்மனியில் தான் அதிகமாக பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுள்ளது. ஆனால் அவற்றின் அழகு இவற்றை கட்டுவதனால் ஏற்படாது. மாறாக அதில் தொழுபவர்களின் மூலமே அது ஏற்படும். எனவே, இன்று நான் மீண்டும் இந்த ஐரோப்பிய நாடுகளிலுள்ள அஹ்மதிகளிடமும் கூறுகின்றேன். நமது பெருமை பள்ளிவாசல்களைக் கட்டுவதில் இல்லை. அதனால்தான், பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருமுறை, ஒரு சமயத்தில் பள்ளிவாசல்களைக் கட்டுவது தொடர்பாக பெருமிதம் கொள்ளப்படும் என்று கூறினார்கள்.

ஆனால், இவ்வாறு பெருமை கொள்வது பெருமானார் (ஸல்) அவர்களது உண்மையான அடியாரோடு தொடர்புள்ள ஜமாஅத்தின் பணியல்ல. மற்ற முஸ்லிம்கள் இவ்வாறு பெருமையடித்து திரியட்டும். நமது ஒவ்வொரு பள்ளிவாசலையும் நிரப்புவது அந்த பள்ளிவாசல் சிறியதாக ஆவதற்கு காரணமாக அமையும்போதுதான் நமது நோக்கம் நிறைவேறும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

நான் இந்த சமயத்தில் பெருமானார் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரிடம் இருந்து நேரடியாக அருள்களைப் பெற்றுக் கொண்ட சில மக்களிடம் இறைவனை வணங்குவதில் அவர்களுக்கு இருந்த துடிப்பு அதில் அவர்களுக்கு இருந்த உயர்வான தரத்தைப் பற்றிய சில சம்பவங்களை நான் கூற விரும்புகின்றேன். அறிவிப்புகளில் இருந்து அவற்றை நான் எடுத்துள்ளேன்.

தொழுகையில் மூழ்கி அதன் இன்பத்தில் திழைத்திருப்பது தொடர்பாக உள்ள இந்த சம்பவத்தை கேளுங்கள்.

**அப்துல் கஃப்பார் சாஹிப் டஸ்கவி அவர்களின் மகனான ஹஸ்ரத் ஜான் முஹம்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் காதியானில் மக்ரிப் தொழுகை மஸ்ஜித் முபாரக்கின் மாடியில் நிறைவேற்றப்பட்டு வந்தது. மஸ்ஜித் முபாரக்கின் மிஹ்ராபின் மேற்குப் பகுதியிலுள்ள மிர்ஸா நிஸாமுத்தீனின் வீட்டு முற்றத்தில் அவர்கள் 8 அல்லது 9 நபர்களுடன் சேர்ந்து ஒரு சபையைக் கூட்டியிருந்தார். அங்கு அவர்கள் ஹுக்கா குடித்துக் கொண்டிருந்தார்கள். மிர்ஸா நிஸாமுத்தீன் அவர்கள் எதிரியாக இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உறவினர் ஆவார். எதிர்ப்பில் மிகவும் முன்னேறியிருந்தார். இவருக்கு மார்க்கத்துடன் எவ்வித விருப்பமும் இல்லாமல் இருந்தது. இறைவன் இல்லை என்று மறுத்து வந்தார்.

இவர்கள் கூறுகின்றார்கள்: அவர் சபையைக் கூட்டியிருந்தார். அங்கு ஹுக்கா குடித்துக் கொண்டிருந்தார்கள். மதுவும் அங்கு இருந்தது. கட்டிலில் சபையைச் சார்ந்தவர்கள் அமர்ந்திருந்தனர். அமர்ந்திருந்த இந்த நபர்கள் நாங்கள் தொழ ஆரம்பித்ததும் முதல் தக்பீர் கூறியதுமே தாரை, தப்பட்டைகளை அடிக்க ஆரம்பித்து விட்டனர். உடனே அங்கிருந்தவர்கள் பாட்டுப்பாட ஆரம்பித்து விட்டனர்.

கூறுகின்றார்கள்: ஆனால் எங்களது தொழுகையில் வியக்கத்தக்க வகையில் இன்பத்தில் திளைத்திருக்கும் நிலை இருந்தது. அங்கு என்ன நடக்கிறது என் அவற்றின் பக்கம் எண்ணம் கூட வரவில்லை. அவர்கள் இசைக்கருவிகளை வாசித்துக் கொண்டிருந்தாலும் எங்களது விஷயத்திலிருந்து அவர்கள் எங்களைத் தடுக்க முடியவில்லை. எங்களது கவனத்தையும் அகற்ற முடியவில்லை.

ஹஸ்ரத் ஹாக்கிம் அலி சாஹிப் பைஅத் செய்த பிறகு தன்னிடம் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

பைஅத் செய்த பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது நான் வைத்திருந்த அன்பு என்னை எந்த அளவு பைத்தியக்காரனாக ஆக்கிவிட்டது என்றால் நான் அவர்களுக்கு முன்னால் ஆஜராகாத எந்த மாதமும் இருக்கவில்லை. வாழ்க்கையே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திப்பதற்காகவே இருக்கின்றது போல் எனக்கு தோன்றியது. நான் எனது வீட்டிற்கு அருகில் தனியக ஒரு சிறு பள்ளிவாசலைக் கட்டிக் கொண்டேன். தஹஜ்ஜுத் தொழுகைக்கான சமயத்தில் நான் அந்த பள்ளிவாசலுக்கு

செல்வேன். அதற்குப் பிறகு இஷா தொழுகையை தொழுத பின்னரே நான் அந்தப் பள்ளிவாசலிலிருந்து வருவேன். 20 அல்லது 22 மணி நேரம் நான் அந்தப் பள்ளிவாசலிலிருந்து வந்தேன். மேலும் நான் நோன்பு வைத்தேன். ஒரு நேரம் உணவருந்தி வந்தேன். ஆனால் எனக்கு எவ்வித பசியும், தாகமும் ஏற்படவில்லை. நான் எவ்வளவு நேரம் தொழுகையிலும் துஆவிலும் திருக்குர்ஆன் ஓதுவதிலும் கழித்து வந்தேன் என்றால் அதனால் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. எனது நிலை எப்படி ஆகி விட்டது என்றால் ஏதாவதொரு விஷயம் தொடர்பாக நான் துஆ செய்தால், அது தொடர்பாக கவனம் செலுத்தினால் அந்த சமயத்திலேயே அது தொடர்பான சரியான செய்தி எனக்கு கிடைத்தது. அதாவது கஷ்ஃப் காட்சியின் மூலமாக இது அவருக்கு தெரிய வந்தது. இதன் காரணமாக எனக்கு இறைவனுடனும் திருக்குர்ஆனுடனும் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களுடனும் இருந்த நேசம் அதிகமாகி விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது எனக்கிருந்த ஈமான் எந்த அளவு வலுவானதாக ஆகிவிட்டதென்றால் அதில் எவ்வித தடுமாற்றமும் எனக்கு ஏற்படவில்லை. பல மக்களும் உள்ளனர். இங்கும் அவர்கள் வந்துள்ளனர். வயதில் பெரியவர்களாக இருக்கின்றனர். ஓய்வில் இருக்கக் கூடியவர்களாக உள்ளனர். அவர்கள் தங்கள் நேரத்தை வீணாகக் கழிப்பதற்குப் பதிலாக இபாதத்துகளின் உயர்ந்த தரமாகும். இது நமக்கு ஒரு முன்மாதிரியாகும்.

**மீர் மஹ்தி ஹுஸைன் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஆரம்ப நாட்களில் மஸ்ஜிது முபாரக்கில் 3 பகுதிகள் இருந்தன. சிறிய பள்ளிவாசல் ஆகும். இந்தப் பகுதிகள் மூன்று தூண்களுக்கு இடையில் இருந்தது. ஒவ்வொரு பகுதியிலம் இரண்டு ஸஃப்கள் நிற்க முடிந்தது. முன்னும் பின்னுமாக நிற்பார்கள். ஒரு ஸஃப்பில் 6 நபர்கள் நிற்க முடியும். பள்ளிவாசலுக்கு வெளியே வலது பக்கத்தில் ஒரு சிறிய முற்றம் இருந்தது. அது இப்போது உம்முல் மூஃமினீன் (அலை) அவர்களது தங்கும் இடமாக இருக்கின்றது. அங்கு மலிக் குலாம் ஹுஸைன் சாஹிப் அவர்களும் மர்ஹூம் முஹம்மது அக்பர் சாஹிப் சனோரி அவர்களும் ரொட்டியும் குழம்பும் எடுத்துக் கொண்டு அங்கு அமர்ந்து இருந்தனர். எனக்கு முதலில் மலிக் சாஹிப் அவர்கள் ஒரு சிறிய தட்டில் சோறு போட்டுத் தந்தார்கள். ரொட்டிகளையும் தந்தார்கள்.

நான் தட்டிலிருந்து ஒன்றிரண்டு கவளங்கள்தான் சாப்பிட்டிருப்பேன். அப்போது மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் தக்பீர் கூறுமாறு கூறிவிட்டு தொழுகையை ஆரம்பித்து விட்டார்கள். நான் உடனடியாக உணவை அங்கேயே வைத்து விட்டு பள்ளிவாசலுக்குள் நுழைய ஆரம்பித்தேன். அப்போது ரொட்டிகளை வழங்கிக் கொண்டிருந்தவர் சற்று கடுமையான தொணியில் மியான்! ரொட்டியை முதலில் சாப்பிடுங்கள். பிறகு தொழுது கொள்ளலாம் என்று கூறினார்கள். மேலும் இல்லையென்றால் நீ பசியால் இறந்து விடுவாய். இனி நாளை மதியம் தான் ரொட்டி கிடைக்கும் என்று பஞ்சாபி மொழியில் கூறினார். நான் அவரிடம் இங்கு நான் ரொட்டிகளை சாப்பிட வரவில்லை. தொழுகைதான் அசல் விஷயமாகும். அதை என்னால் விட முடியாது என்று கூறினேன். இவ்வாறு கூறிவிட்டு நான் இஷா தொழுகையில் கலந்து கொண்டேன்.

**ஹகீம் ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிப் தனது தந்தையாரான ஹாஃபிஸ் நபி பக்ஸ் சாஹிப் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அவர்களுக்குள்ளே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது பேரன்பு இருந்தது. இயல்பாகவே அவர்கள் எந்த அளவு முன்னெச்சரிக்கையாக இருந்து வந்தார்கள் என்றால் யாராவது எப்போதாவது ஹுஸுர் (அலை) அவர்களின் காலத்திலுள்ள நிலைமைகளைப் பற்றி கூறும்படி கூறினால் எனக்கு எனது நினைவாற்றல் மீது நம்பிக்கையில்லை. அதன் காரணமாக ஏதாவதொரு தவறான விஷயத்தை ஹுஸுர் (அலை) அவர்களுடன் தொடர்புபடுத்தி நான் கூறிவிடக் கூடாது என்று அவர்கள் பதில் கூறுவார்கள். அவர்கள் கால்வாயுடன் சம்பந்தப்பட்ட ஒரு துறையில் நிலத்தை அளப்பவராக பணிபுரிந்து வந்தார்கள். தண்ணீர் சுழற்சி அதிகமாக இருக்கும் நாட்களில் ஏறக்குறைய முழு நாளும் அவர் சுற்றி வர வேண்டியது வரும். எதுவரையென்றால் வெப்பம் கடுமையாக இருக்கும் நாட்களிலும் கூட (அதாவது பஞ்சாபில் கடுமையாக வெப்பம் இருக்கின்ற மாதங்களிலும்) அவர் பல பகுதிகளையும் சுற்றி வர வேண்டியது வரும். இதனால் மனிதனுக்கு எந்த அளவு சோர்வு ஏற்படும் என்பது மிகவும் தெளிவான விஷயமாகும். ஆனால், இரவில் அவர்கள் தஹஜ்ஜுது தொழுவதற்காக கண்டிப்பாக எழுவார்கள். எங்களையும் இவ்வாறு தொழும்படி வலியுறுத்திக் கூறி வந்தார்கள். அதாவது தமது பிள்ளைகளையும் இவ்வாறு தொழுமாறு கூறுவார்கள். பிள்ளைகள் இளைஞர்களாக இருந்தனர்.

ரமலான் நாட்களில் அதிகமான வெப்பம் இருந்தும்கூட முறையாக நோன்பு வைப்பார்கள். குளிர்காலத்தில் தஹஜ்ஜுத் தொழுகையில் சத்தமாக கிராஅத் ஓதியவாறு தமது பிள்ளைகளையும் தன்னுடன் தொழுகையில் பங்குபெற வைப்பார்கள். அவர்கள் அல்லாஹ்வின் அருளால் திருக்குர்ஆன் ஹாஃபிஸ் ஆக இருந்தார்கள்.

தொழுமாறும், நோன்பு நோற்குமாறும் எங்களுக்கு வலியுறுத்தக் கூறி வந்தார்கள். மிகுந்த கண்டிப்புடன் அதனை கண்காணித்து வந்தார்கள். அதில் சோம்பேறித்தனம் காட்டினால் மிகவும் கோபமடைவார்கள். திருக்குர்ஆனை அவர்களே எங்களுக்கு கற்றுத் தந்தார்கள். பகலில் தமது பணிகளில் ஈடுபட்டிருந்த காரணத்தால் அவர்களுக்கு நேரம் கிடைக்காமல் இருந்தால் இரவில் திருக்குர்ஆன் கற்பித்து வந்தார்கள். இதுவே பெற்றோர்களுக்கான முன்மாதிரி ஆகும்.

நமது பிள்ளைகளுக்கான தர்பிய்யத்தில் இந்த முன்மாதிரியை நாம் நம் கண் முன்னால் நிறுத்த வேண்டும். இவ்வாறு பெற்றோர்கள் இபாதத் செய்யக் கூடியவர்களாக இருந்தால் அவர்களது பிள்ளைகள் அவர்களைப் பின்பற்றி நடப்பார்கள். இந்த நாடுகளில் எங்கு மக்கள் மார்க்கத்தை விட்டும் விலகிச் சென்று கொண்டிருக்கிறார்களோ அங்கு இதனால் நமது பிள்ளைகளில் சிலருக்கு தீய தாக்கம் ஏற்படுகின்றது. இவ்வகையில் இந்த நாடுகளில் மிக அதிகமாக முயற்சி செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. நாம் மார்க்கத்தில் நிலைத்திருப்பதுடன் மட்டுமல்லாமல் அதன் தரத்தையும் உயர்த்த வேண்டும். பிறகு இதைவிட அதிகமாக நமது பிள்ளைகளைக் கண்காணித்து வருவதுடன் அவர்களது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். 40 அல்லது 45 வயதானவர்கள் பாதி இரவு வரை டி.வி. பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களது மனைவிமார்களிடமிருந்து இவர்களில் சிலரைப் பற்றிய புகாரும் வந்திருக்கின்றது. அல்லது இவர்கள் இன்டர்நெட்டில் அமர்ந்து விடுகின்றார்கள். பிறகு இவர்கள் தமது பிள்ளைகளுக்கு எப்படி தர்பிய்யத் வழங்கப் போகின்றார்கள்?

எனவே குறிப்பாக இந்த நாட்டில் வாழ்கின்ற அஹ்மதிகளுக்கும் பொதுவாக உலகிலுள்ள எல்லா அஹ்மதிகளுக்கும் இது ஒரு சவாலாகும். ஏனென்றால், இன்றைய நாட்களில் ஷய்த்தான் தனது செயல்களில் எல்லையைக் கடந்து விட்டான். அவனை எதிர்த்து நிற்க வேண்டும். இறைவனின் உதவி இல்லாமல் இது நடக்காது. இபாதத்துகள் மூலமாகத்தான் இறைவனின் உதவியைப் பெற முடியும். எனவே இதன் பக்கம் மிக அதிகமாக கவனம் செலுத்துங்கள்.

**ஷேக் நூருத்தீன் சாஹிப் அவர்கள் தாம் பைஅத் செய்த பிறகுள்ள தமது நிலைமைகளைப் பற்றி கூறுகின்றார்கள்:**

சிறிது காலத்திற்குப் பிறகு நான் அமிர்தசரஸ் வந்து விட்டேன். அங்கு வியாபாரத்தில் ஈடுபட்டதனால் கவனமின்மை உருவாகியது. மார்க்க நிலைமை நன்றாக இருக்கவில்லை. வெப்பத்தின் நாட்களாக இருந்த சமயத்தில் மதிய வேளையில் நான் தூங்கி விட்டேன். அப்போது மரணத்திற்கு முன்னுள்ள இறுதி நொடிகளில நான் இருப்பது போன்று எனக்கு தோன்றியது.

இவ்வாறு கனவில் தன்னை இவர் பார்த்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகின்றார்: நான் மக்கள் பேசுவதைக் கேட்கின்றேன். ஆனால் அதற்கு என்னால் பதில் கூற முடியவில்லை. நான் எனக்கு ஏற்படுகின்ற அனைத்து காட்சிகளையும் பார்த்துக் கொண்டிருநதேன்.

கஷ்ஃப் காட்சியைக் காண்கின்ற நிலையில் இவர் இருந்துள்ளார் என்று தெரிகிறது. கூறுகின்றார்: என்னை குளிப்பாட்டினார்கள். கஃபன் அணிவித்தார்கள். பிறகு என்னை அடக்கம் செய்தார்கள். மண்ணும் போடப்பட்டு விட்டது. மக்கள் என்னை அடக்கம் செய்து விட்டுத் திரும்பிய சமயத்தில் கபர் என்னை இரு தரப்பிலிருந்தும் எப்படி அமுக்கியது என்றால் என்னால் அதை சகித்துக் கொள்ள முடியவில்லை. இந்நிலையில் எனக்கு நேராக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நிற்பதை நான் பார்த்தேன். அவர்கள் என் பக்கம் தமது விரல்களை நீட்டியவாறு என்ன? நீங்கள் நம்முடன் இத்தகைய வாக்குறுதியையா செய்திருந்தீர்கள்? என்று கேட்டார்கள். ஒருபுறம் எனக்கு நேர்ந்த துன்பத்தைப் பார்த்தும் மறுபக்கம் ஹஸ்ரத் சாஹிபின் சொற்களைக் கேட்டும் விட்டு நான் நன்றாக அழுதேன். மேலும் ஹுஸூர் நான் மறந்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்.

நான் தவ்பா செய்கின்றேன். இனி இந்த பலவீனத்தைக் காட்டமாட்டேன் என்று ஹஸ்ரத் சாஹிபிடம் கூறினேன். ஹஸ்ரத் சாஹிப் திரும்பிச் சென்று விட்டார்கள்.

கூறுகின்றார்கள்: எனது கண்கள் திறந்தன. அந்த நிலையிலிருந்து மீண்டும் நான் திரும்பி வந்து விட்டேன். நான் எந்த அளவு பயத்திலும் துன்பத்திலும் நான் ஆழ்ந்திருந்தேன் என்றால் அதை என்னால் விளக்கிக் கூற முடியாது. கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. மிக அதிகமாக நான் பயந்தேன். கிப்லாவை நோக்கி நின்றவாறு நான் தொழ ஆரம்பித்தேன். ஒரு காலக்கட்டம் வரை எனது உடல் மீது இந்த சம்பவத்தின் தாக்கம் இருந்து வந்தது. இதனால் எனக்கு துன்பமும் வலியும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

அந்தக் காலத்தில் இத்தகைய நன்மைகளுக்கு மறதியால் ஏற்பட்ட தவறுகளைக் கண்டு அல்லாஹ் இவர்கள் மீது கருணை காட்ட விரும்பினான். அதனால் இந்த வழிமுறை மூலமாக அவர்களை எச்சரித்தான். இதுவும் கூட அல்லாஹ்வின் ஒரு அன்பான பறிமாற்றமாகும். அவர்கள் சீர்குலைந்து போகும்படி அவர்களை விட்டுவிட மாட்டான்.

பிறகு பெண்களுக்கும் ஒரு முன்னுதாரணம் இருக்கின்றது. சில சமயங்களில் பெண்கள் பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறியவாறு தொழுகை நேரங்களில் முறையாக தொழுகையைப் பேணாமல் இருக்கின்றார்கள். சிலரே இவ்வாறு உள்ளனர். பலரையும் நான் பார்த்துள்ளேன். ஆண்களை விட அதிகமாக அவர்களுக்கு தொழுகைகளின் பக்கம் கவனம் இருக்கின்றது.

**ஹஸ்ரத் மாயி காக்கு சாஹிபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை நானும் சில பெண்களும் ஷேக்குவானிலிருந்து ஹுஸுர் அவர்களை சந்திப்பதற்காக வந்திருந்தோம். மவ்லவி கரம்தீன் சாஹிபுடைய தாயார் என்னிடம் எங்களுக்கு மக்ரிப் தொழுகையைத் தினமும் இஷா தொழுகையுடன் சேர்த்து தொழ வேண்டியது வருகின்றது. பணிகளில் ஈடுபட்டிருப்பதால் இவ்வாறு தொழ வேண்டியது உள்ளது. என்ன செய்வது? இது தொடர்பாக ஹஸ்ரத் சாஹிபின் ஃபத்வாவைக் கேளுங்கள் என்று கூறினார். நான் ஹுஸுர் அவர்களிடம் பெண்களுக்கு குழந்தைகளின் காரணமாக மக்ரிப் தொழுகையை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. என்ன செய்வது? என்று கேட்டேன்.

அதற்கு ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் முழுமையாக முயற்சி செய்தால் காலதாமதம் ஆகும் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் அவ்வாறான கட்டாய சூழ்நிலை இருந்தால் பெண்கள் இஷா தொழுகையை மக்ரிப் தொழுகையுடன் சேர்த்து ஜம்அ செய்ய வேண்டும். ஏனென்றால், எவ்வாறு சுபுஹ் நேரத்தில் மலக்குகள் இறங்குகின்றார்களோ அவ்வாறே மக்ரிப் சமயத்திலும் அவர்கள் இறங்குகின்றார்கள். எனவே, மக்ரிப் மற்றும் இஷா தொழுகையைச் சேர்த்து தொழ வேண்டியது வந்தால் அவற்றை மக்ரிப் தொழும் சமயத்தில் சேர்த்து தொழுவது சிறந்ததாகும் என்று கூறினார்கள்.

**மாயி சாக்கு சாஹிபா தொடர்ந்து தமது அறிவிப்பில் கூறுகின்றார்கள்:**

அன்றைய நாளிலிருந்து இன்று வரை நாங்கள் எங்களது ஏற்பாட்டின்கீழ் இதை செய்து வருகின்றோம். அதாவது தொழுகைகளை சேர்த்து தொழுவதேயில்லை. மாறாக, மக்ரிப் தொழுகைக்கு முன்னதாகவே குழந்தைகளுக்கு உணவு தயார் செய்து அவர்களுக்கு சாப்பிட கொடுத்து விட்டு மக்ரிப் தொழுகைக்காக நாங்கள் நேரத்தை ஒதுக்கித் தயாராகி விடுவோம். இதுவே இவர்களின் முன்மாதிரியாகும்.

தொழுகைகளை சேர்த்து தொழுவதன் பக்கம் கவனம் செல்லவில்லை. மாறாக தொழுகைகளை தனித்தனியாக தொழுவதற்கு எந்த வழிமுறையை மேற்கொள்ள வேண்டுமோ அந்த வழிமுறையின் பக்கம் அவர்கள் கவனம் செலுத்தினர். எனவே, தாய்மார்களும் பிள்ளைகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கின்றார்கள். அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இஸ்லாம் அந்த வல்லமையுள்ள, ஒவ்வொரு குறையிலிருந்தும் தூய்மையாக இருக்கின்ற அந்த இறைவனைத்தான் நம் முன்னால் வைத்திருக்கின்றது. அவனிடம் நாம் துஆக்களைக் கேட்க முடியும். பெரும் பெரும் எதிர்பார்ப்புகளை அவன் மூலமாக நிறைவேற்ற முடியும். இதற்காக அவன் சூரா ஃபாத்திஹாவில் நமக்கு துஆ கற்றுத் தந்துள்ளான். நீங்கள் என்னிடம் கேளுங்கள் என்று அவன் கூறுகின்றான்.

இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் அதாவது, இறைவா! எவர்கள் மீது உனது பெருங்கருணையும், அருட்கொடைகளும் இருந்தனவோ அந்த மக்களின் பாதையை நீ எங்களுக்கு காட்டுவாயாக!

நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம் என்று கூறியவாறு நீங்கள் அமர்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே அவன் இந்த துஆவை உங்களுக்கு கற்றுத் தந்துள்ளான். இறைவனது நெருக்கமான அடியார்களுக்கு கிடைக்கக்கூடிய அருள்களைப் பெறும் வகையிலுள்ள நற்செயல்களை செய்து வர வேண்டும்.

கூறுகின்றார்கள்: எவர்கள் உண்மையான உணர்வுடனும் தூய உள்ளத்துடனும் இறைவன் பக்கம் வருவாரோ அவர் ஒருபோதும் வீணாக மாட்டார். எவர் இறைவனுக்காக ஆகிவிடுவாரோ இறைவன் அவருக்காக ஆகி விடுகின்றான் என்பது உண்மையான, உறுதியான விஷயமாகும். ஒவ்வொரு களத்திலும் அவன் அவர்களுக்கு உதவி செய்கின்றான். அவன் அவர்கள் மீது எந்த அளவு அருட்கொடைகளை இறக்குகின்றான் என்றால் மக்கள் அவர்களது ஆடையிலிருந்து அருள்களை பெறுகின்றார்கள்.

அல்லாஹ் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை ஏன்? கற்றுத் தந்துள்ளான் என்றால் அதன் மூலம் உங்களது கண்கள் திறக்க வேண்டும். மேலும் நீங்கள் செய்துள்ள பணிகளின் விளைவுகள் எப்படி இருக்கின்றது? என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். ஒரு மனிதன் ஒரு செயலை செய்கின்றான். அதற்கு எந்த விளைவும் ஏற்படாமல் இருந்தால் அவன் தனது செயல்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எனது செயல்கள் எவ்வாறு உள்ளன என்று அவன் பார்க்க வேண்டும். எந்த செயல்களுக்கு எவ்வித விளைவும் ஏற்படாமல் இருக்கின்றதோ அது என்ன செயல்?

**இறைவணக்கத்தின் கோட்பாட்டைப் பற்றி சுருக்கமாக அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இறைவணக்கத்தின் கோட்பாட்டின் சுருக்கம் இதுவேயாகும். இறைவனைப் பார்ப்பது போன்று அவர் இறைவன் முன்னால் தன்னை நிறுத்த வேண்டும் அல்லது இறைவன் அவரை பார்க்கின்றான் என்ற நிலை இருக்க வேண்டும். எல்லாவிதமான கலப்படத்திலிருந்தும் ஷிர்க்கிலிருந்தும் தூய்மையாகி விட வேண்டும். அவனது மகத்துவம், அவனது காத்தோம்பும் பண்பு ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். சுன்னத்தான துஆக்களையும் ஏனைய துஆக்களையும் இறைவனிடம் அதிகமாக கேட்க வேண்டும். அதிகமாக தவ்பா மற்றும் இஸ்திஃபார் செய்ய வேண்டும். மீண்டும் மீண்டும் தனது பலவீனங்களை எடுத்துக் கூற வேண்டும். அதன் மூலம் நஃப்ஸ் தூய்மையடைந்து விடலாம். மேலும் இறைவனுடன் உண்மையான தொடர்பு ஏற்பட வேண்டும். அவனது அன்பில் மூழ்கிவிட வேண்டும். இதுவே முழு தொழுகையின் சுருக்கமாகும். அவை அனைத்தும் சூரா ஃபாத்திஹாவில் வந்து விடுகிறது.

பாருங்கள்! இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன் என்பதில் நமது பலவீனங்களை வெளிப்படுத்திக் கூறுவது இருக்கின்றது. உதவிக்காக இறைவனிடமே வேண்டப்படுகிறது. இறைவனிடமிருந்தே உதவி கோரப்படுகிறது. அதற்கு பிறகு நபிமார்கள், ரஸூல்மார்கள் ஆகியோரது வழியில் செல்வதற்காக துஆ கேட்கப்படுகின்றது. நபிமார்கள், ரஸூல்மார்கள் மூலமாக இந்த உலகில் வெளிப்பட்டுள்ள அந்த அருட்கொடைகளைப் பெறுவதற்காக வேண்டப்படுகிறது. அவை அவர்களைப் பின்பற்றியவாறு அவர்களது வழிமுறைக்கேற்ப செல்வதன் மூலமாகவே கிடைக்கின்றது. அடுத்து எவர்கள் உனது நபிமார்களையும், ரஸூல்மார்களையும் மறுத்தார்களோ அவர்களது வழியில் செல்வதிலிருந்தும் எங்களைக் காப்பாற்றுவாயாக! என்ற துஆ கேட்கப்பட்டுள்ளது. அவர்கள் தற்பெருமையுடனும், தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடனும் நடந்து கொண்டனர். அவர்களுக்கு இவ்வுலகிலேயே அவனது கோபம் இறங்கியது அல்லது அவர்கள் உலகையே தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் நேர்வழியைக் கைவிட்டு விட்டனர். தொழுகையின் அசல் நோக்கம் துஆவேயாகும். கலப்பற்ற மனத்தூய்மையுடனும் இறைவனிடம் முழுமையான அன்பும் உருவாக துஆ செய்ய வேண்டும். மிகப்பெரும் தீங்கை விளைவிக்கின்ற செயல்களின் பதிவேட்டை கருப்பாக ஆக்குகின்ற பாவங்கள் மீது இயல்பாகவே வெறுப்பு ஏற்பட வேண்டும். நஃப்ஸ் தூய்மையடைந்து பரிசுத்த ஆவியின் உதவி கிடைக்க வேண்டும். உலகின் எல்லா பொருள்களும் இடம், கம்பீரம், பொருள், செல்வம், கண்ணியம் மகிமை ஆகியவற்றை விட இறைவனுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். எல்லாவற்றையும் விட அதிகமாக அவனே பிரியமானவனாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் வேதத்தில் கூறப்படாத அவனை விட்டு விட்டு எவர் மற்ற கதைகளைப் பின்பற்றிச் செல்கின்றாரோ அவர் வீழ்ந்து கிடப்பவராவார். அவர் பொய்யராவார்.

தொழுகை உண்மையில் ஒரு துஆவாகும். அது கற்றுத் தரப்பட்ட வழிமுறைக்கேற்ப அதில் வேண்டப்படுகிறது. சில நேரம் நிற்க வேண்டியது வருகிறது. சில நேரம் குனிய வேண்டியது வருகிறது. சில நேரம் ஸஜ்தா செய்ய வேண்டியது வருகிறது. எவர் அசலான சத்தைப் புரிந்து கொள்வதில்லையோ அவர் வெறும் தோலின் மீது கை வைக்கின்றார்.

கூறுகின்றார்கள்: சிலர் பள்ளிவாசலுக்கும் செல்கின்றார்கள். தொழுகின்றார்கள். ஏனைய இஸ்லாமிய கடமைகளையும் நிறைவேற்றுகின்றார்கள். ஆனால் இறைவனின் உதவி அவர்களோடு இருப்பதில்லை. அவர்களது ஒழுக்கத்திலும் பழக்கவழக்கத்திலும் எவ்வித சிறப்பான மாறுதலும் தென்படுவதில்லை. அதன் மூலம் அவர்களது இபாதத்துகளும் சடங்காக நிறைவேற்றப்படும் இபாதத்துகளே என்பது தெரிய வரும். அதில் எவ்வித உண்மையும் இல்லை. ஏனென்றால், இறை கட்டளைகளை நிறைவேற்றுவது ஒரு விதையைப் போன்று இருக்கின்றது. அதன் தாக்கம் ஆன்மா மீதும், உடல் மீதும் ஏற்படுகின்றது. ஒரு வயலுக்கு நீர்ப்பாய்ச்சி மிகவும் உழைத்து அதில் விதையை நடுகின்ற ஒரு நபர் விதையை விதைத்து பிறகு ஒன்றிரண்டு மாதங்கள் கழிந்த பிறகும் அந்த விதையிலிருந்தும் திராட்சை வெளிவரவில்லையென்றால் அதாவது விதை வெடிக்கவில்லை என்றால் விதை மோசமானது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். இதுவே இறைவணக்கத்தின் நிலையாகும். ஒரு நபர் இறைவன் ஒருவனே. அவனுக்கு இணையில்லை என்று கருதுகின்றார். தொழுகைகளை நிறைவேற்றுகின்றார். நோன்புகளை வைக்கின்றார். முடிந்த வரை இறை கட்டளைகளைப் பேணி நடந்து அவற்றை நிறைவேற்றுகின்றார். ஆனால் இறைவனிடமிருந்து எவ்வித சிறப்பான உதவியும் அவருக்கு கிடைக்கவில்லையென்றால் எந்த விதையை அவர் விதைக்கின்றாரோ அது மோசமாக இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும்.

இதே தொழுகைகளை நிறைவேற்றியவாறு பலரும் குதுப் ஆகவும், அப்தால்களாகவும் ஆகியுள்ளனர். ஆனால் உங்களுக்கு என்ன நேர்ந்தது? அவ்வாறு தொழுத பிறகும் உங்களிடம் எந்த விளைவும் வெளிப்படவில்லை. ஒரு மருந்தை நீங்கள் உபயோகித்து அதிலிருந்தும் எந்தப் பயனும் உங்களுக்கு கிடைக்கவில்லையென்றால் அந்த மருந்து உங்களுக்கு ஏற்றதல்ல என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். இப்படிப்பட்ட தொழுகைகளின் நிலையும் இதற்கு ஒப்பானதாகவே இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் இந்த தூதுச் செய்தியை புரிந்து கொள்பவர்களாக இறைவன் நம்மை ஆக்குவானாக! அதற்கேற்ப நமது வாழ்நாளைக் கழிக்கக் கூடியவர்களாக அவன் நம்மை ஆக்குவானாக!

அல்லாஹ் உண்மையான முறையில் நமக்கு இறைவணக்கத்திற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! மேலும் தனது திருப்தியைப் பெறுபவர்களாக அவன் நம்மை ஆக்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT DARUL AMAAN MOSQUE, LONDON**
**ON 27.04.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456